கற்க கசடறக்கற்க கற்றபின்
நிற்க அதற்குத்தக

தமிழ் எங்கள் தாய்

# 10 வது ஆண்டுநிறைவு மலர்

1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006

# 2007

Asker & Bærum
தமிழ் அறிவாலயம்

# Asker & Bærum

# 2007

*GRATULERER SÅ MYE MED TIÅRS JUBILEUM!*

**Helt siden Akershus fylkeskommune startet med å administrere tilskudd til lokale innvandrerorganisasjoner og frivillige flerkulturelt virke, har vi hatt kontakt med Asker og Bærum Tamilske Forening. Vi nevner dette for nettopp å understreke den kontinuitet foreningen har greid å opprettholde gjennom disse årene, og med et program og et aktivitetsnivå som er imponerende. Vi har gjennom ordningen kunnet bidra til dette aktivitetsnivå, men det som imponerer mest er den egenadel som foreningen har bidratt med og som er et eksempel til etterfølgelse for mange andre organisasjoner. Dere har greid å gjennomføre mange aktiviteter, ofte på tross av stramme bidrag, fra det offentlige. I det programmet som er gjennomført i disse årene, har dere i stor grad satset på barn og unge og opplæring i språk og andre skolefag, samt datakunnskap for både unge og eldre medlemmer, likestilt med de kulturelle aktiviteter og markeringer som også er gjennomført.**

**Vi ønsker dere alt godt og lykke til med foreningens virke i årene fremover, og håper at medlemmene vil fortsette det gode arbeidet for folkegruppen og samfunnets beste.**

**Til lykke med dagen**

**De beste hilsener**
**fra Akershus fylkeskommune,**
**kultur.akershus**
**ved Arne Thomassen**

# பத்தாவது ஆண்டில்.....
# தமிழ் அறிவாலயம் ஒருபார்வை

தமிழ் அறிவாலயமானது, தனது பத்தாவது ஆண்டினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ் வேளையில், இதன் வரலாற்றினை மீள்பார்வைக்கு உட்படுத்துவது மிகவும் அவசியமாகும். அத்தோடு இதன் வரலாற்றினை எழுதுவதற்கு எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை எண்ணி நான் மிகவும் பெருமிதமடைகிறேன்.

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களாகிய நாம் எமது பாரம்பரியமான மொழி, கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கு பரிமாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் எமக்கு உண்டு. இங்கு பல கலாசாரம், பல மொழிகள், பல கலை வடிவங்கள் மற்றும் பல வகையான தொடர்பு சாதனங்கள் நிறுவனமயப் படுத்தப்பட்டு காணப்படுகின்ற போதிலும் எமது தமிழ் சமுதாயத்திற்கு உரிய பாரம்பரியம், மொழி, கலை, கலாசாரம் பண்பாடு போன்ற பல விடயங்களை பரிமாற்றுவதற்கும் பேணிக்காப்பதற்கும் கல்வி ஓர் கருவியாகவும், பாடசாலை அதற்கான சாதனமாகவும் காணப்படுவதனால் புலம் பெயர்ந்து வாழுகின்ற எமது சமுதாயத்திற்கு தமிழ் பாடசாலை மிகவும் அவசியமானது என நான் கருதுகிறேன்.

இந்த அடிப்படையிலேயே பாரும் இல் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வசித்து வந்த ஈழத்தமிழர்களால் அஸ்கர், பாரும் தமிழர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் பல சிறுவர்களைக் கொண்ட ஒரு சமூகமாகவும் ஒன்றியம் வளர்ச்சி பெற்றது. எமது சிறுவர்கள் உரையாடும் போது நோர்வேஜிய மொழியிலேயே உரையாடினார்கள். இதை அவதானித்த பெற்றோர்கள் எமது சிறுவர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும், தமிழ் மொழியை அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டதன் விளைவாக திரு க.சுந்தரலிங்கம் அவர்களின் முன் யோசனையின் அடிப்படையில் இங்கு வாழும் பல தமிழர்களின் ஒத்துழைப்புடன் 1997ஆம் ஆண்டில் Vøyenenga Skole என்னும் இடத்தில் திருமதி வாசுகி.ஜெயபாலன் அவர்களை அதிபராகவும் திரு. கார்மேகம் நந்தா, திருமதி கௌரி. தயாளன் ஆகியோரை ஆசிரியர்களாகவும் கொண்டு பதினெட்டு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இது தமிழ் அறிவாலயமென பெயர்சூட்டப்பட்டு 2000 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட தமிழர் ஒன்றிய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க திரு. கார்மேகம். நந்தா அவர்களால் பாடசாலைக்கீதம் இயற்றி புகழ் பெற்ற கர்நாடக இசைக்கலைஞர் கலாசூரி திருமதி. அருந்ததி. சிறீரங்கன் அவர்களால் இசையமைத்து பாடப்பட்டதும் எமது பாடசாலைக்கு பெருமைசேர்க்கும் விடயங்களாகும்.

இங்கு வாழும் தமிழர்களின் கணனி அறிவை வளர்க்கும் பொருட்டு திரு. தவேந்திரன் அவர்களால் 2000 ஆம் ஆண்டு அன்றைய நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிர்வாகம் ஏற்று ஒன்றியத்தால் ஆரம்பிக்கப்பட்ட கணனி வகுப்புகள் தொடர்ந்தும் பாடசாலையால் முன்னெடுக்கப்படுவது யாவரும் அறிந்ததே. பாடசாலைக்கான விளையாட்டுப் போட்டியும் இவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களுக்கு தேவையான அறிவியல் பாடமான கணிதமும் சர்வதேச மொழியான ஆங்கிலமும் 2001ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2002 இல் அன்றைய தமிழர் ஒன்றிய நிர்வாகத்தின் முயற்சியால் கலைத்துறைப் பாடங்களான பரதநாட்டியம், சங்கீதம், KeyBoard என்பன முறையே திமதி.மேசி மாக்கிரெட் சூசை, திருமதி இரஞ்சிதமலர்.நந்தா, திரு.கணேஸ் ஆகிய ஆசிரியர்களால் தொடக்கி வைக்கப்பட்டன.

தற்போது தமிழ் அறிவாலயத்தின் பழைய மாணவர்களான செல்வி கவிதா சிவானந்தன் சங்கீத பாடத்தையும், செல்வி அபிநயா ஜெயசீலராஜா பரதநாட்டியத்தையும் 2006 முதல் கற்பித்து வருகிறார்கள் என்பது எமது பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதோடு பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாகவும் திகழ்கின்றது.

கல்விரீதியாக பாரிய வளர்ச்சியினைக் கண்டுகொண்டிருக்கின்ற அதேவேளை மாணவர்களின் மேலதிக செயற்பாடுகளான மாணவர் மன்றமும், ஆசிரியர், மாணவர், பெற்றோர்களுக்கான புரிந்துணர்வை மேம்படுத்த 2006 இல் செயற்படுத்தப்பட்ட பாடசாலைச் சுற்றுலாவையும் உள்ளடக்கிய ஒரு முதிர்ச்சியடைந்த ஒரு முறைசார் கல்வி நிறுவனமாக 2002 முதல் Dønski V.G Skole வளாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயங்களாகும்.

எமது பாடசாலையின் வளர்ச்சியின் ஒரு அங்கமாக ஆசிரியர் பெற்றோர்களுக்கான அறிவூட்டலும், வலுவூட்டலுமான பல கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்கு ஒஸ்லோ முத்தமிழ் அறிவாலயத்தினரதும், ஸ்ரவங்கர் தமிழ் அறிவாலயத்தினரதும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதில் பல சிறந்த கல்விமான்கள் கலந்துகொண்டு அறிவுரைகளையும் கருத்துகளையும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வழங்கியதால் சிறந்த பல பெறுபேறுகளை, நோர்வேயில் புலம பெயர்ந்து வாழும் எமது மக்கள் பெற்றுக் கொண்டனர் என்பது வெளிப்படையான உண்மை.

இவ்வனைத்து முயற்சிகளுக்கும் அஸ்கர்,பாரும் தமிழர் ஒன்றியத்தைச்சார்ந்த எல்லா அங்கத்தவர்களது ஒத்துழைப்பும் ஒற்றுமையுமே காரணமாகும். இவர்களோடு, அதிபர்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் மற்றும் நலன் விரும்பிகளும் சேர்ந்து உழைத்ததன் பயனே இன்றைய அஸ்கர்,பாரும் தமிழ் அறிவாலயம் என்றால் அது மிகையாகாது. அவர்கள் அனைவருக்கும் நன்றிகூற நான் இங்கு கடமைப்பட்டிருக்கிறேன். பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து

இன்றுவரைக்கும் தொடர்ந்து தமிழ் மொழியைக் கற்பித்துக் கொண்டிருக்கின்ற திருமதி கௌரி. தயாளன் அவர்களின் சேவை அளப்பெரியதும், பாராட்டுதலுக்கு உரியதுமாகும்.

பாடசாலைக்குத் தேவையான பாட நூல்களை அச்சிடுவதற்கு தமிழர் ஒன்றிய நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்ட போது ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு வழிகாட்டியாக இருந்த திரு. ஜேம்ஸ் ஜெயசீலராஜா அவர்களுக்கும், அர்ப்பணிப்புடன் அம்முயற்சிக்கு ஒத்துழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரின் முயற்சியும் S.உதயன்MA,திருமதி.சர்வா.பாஸ்க்கரன்BA;செல்வி ஞானகி.தர்மலிங்:கம் க.சிவபாதம் சட்டத்தரணி, திருமதி. கேமாவதி.கபிலதாஸ், செல்வி மு. சிந்து, கவிஞர் த.துரைசிங்கம், S நிரோஜனன், திரு. இ.ஆத்மநாதன், திரு க.சுந்தரலிங்கம், ஆகியோரின் இடைவிடாத உழைப்பும் மற்றும் முயற்சிகளின் விளைவாகவும் முதலாம் இரண்டாம் தர வகுப்புகளுக்கான பாடநூல்கள் 2005ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1994 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது தமிழ் அறிவலயம் கடந்த காலங்களில் ஏற்பட்ட சில எதிர்பாராத கோட்பாடு, புரிதல் தவறுகளால் ஏற்பட்ட தடங்கல்களையும் மீறி எமது கல்விச் சேவைப்பயணம் வீறுநடை போடுகின்றது என்பது எமது பாடசாலைக்கு கிடைத்த வெற்றி என்றே நான் கருதுகிறேன். இது போன்று எதிர்காலத்தில் பாடசாலைக்குத் தேவையான போதியளவு ஆசிரியர்களை மாணவர்கள் மத்தியில் உருவாக்கும் என்ற நம்பிக்கையோடும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டும் தேவையான பாடப்புத்தகங்களை ஆரம்பபிரிவுகள் முதல் உயர் வகுப்பு மாணவர்கள்வரை எமது சூழலுக்கும் சமகால நடைமுறைகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் இலகுபடுத்தப்பட்ட முறையிலும் பாடசாலைக்கான ஓர் நிரந்தர இடத்தையும் கொண்டு, மற்றும் பல அடிப்படை வசதிகளைக் கொண்டும் எதிர்காலத்தில் செழித்து வளரும் என்ற நம்பிக்கையோடும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழச்சிறார்கள் தமிழ் மொழியை அழியவிடாது பேணிப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு எமது தமிழ் அறிவாலயம் கூடியளவு பங்களிப்பினை செய்யவேண்டுமென எதிர்பார்த்து அந்த நம்பிக்கையுடன் மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறேன்.

## வாழ்க அஸ்கர், பாரும் தமிழ் அறிவாலயம்.

நன்றி

தி.றோகான்

அஸ்கர், பாரும் தமிழ் அறிவாலயம்

(கல்விப் பொறுப்பாளர் 2006, 2007)

# Arivalayam அறிவாலயம்

## அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலய ஆசிரியர்களின் வாழ்த்து மடல்

பத்தாவது பிறந்தநாளில் காலடி எடுத்து கொண்டு பொது நிலமையாக வளர்ந்து வரும் அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயம் இவ்வாண்டில் தனது பிறந்த நாளை தனது குழந்தைகளுடன் கொண்டாடுவதையிட்டு ஆசிரியர்களாகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்று ஒன்றுகூடலுடன் ஆரம்பமாகி இன்று அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயம் என்னும் பெயரைக் கொண்டு முத்தமிழுடன் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் எமது அறிவாலயத்தை மென் மேலும் பல துறைகளில் வளர்ச்சியடைய ஆசிரியர்களாகிய நாம் எப்பொழுதும் எங்களது சேவையை வழங்கி வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தமிழ்வாழ, தமிழினம் வாழ, தமிழர் தம் பண்பாடு வாழ உருவாக்கப்பட்ட அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயமே நீ பல குழந்தைச் செல்வங்களுக்கு பல்கலைகளையும் கற்பித்து பல கல்வி மான்களை உருவாக்கி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

”ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து”

அஸ்கரோ பாரும்
தமிழ் அறிவாலய
ஆசிரியர்கள்

# தாய் மொழிக் கல்வியில் ஒரு தசாப்தம்-

நேற்றுப் போல் இருக்கிறது. தமிழ் அறிவாலயம் ஆரம்பித்து. பத்து வருடங்கள் என்பது தாய்நாட்டில் சிறிய காலம். புலம்பெயர் வாழ்வில் அதுவே மிக நீண்டகாலம் எனலாம். தாய்மண்ணிலிருந்து வெளியேறி வேறு மண்ணில் வாழ நேர்ந்தாலும், எமது அடையாளங்களைக் காப்பாற்ற நாம் விரும்புகிறோம். எமது முக்கிய அடையாளமான தாய்மொழியை அடுத்த தலைமுறை எப்படிக் காப்பாற்றப் போகிறது என்ற கேள்வி எம்முன் எப்போதும் நிற்கிறது. இந்த இடத்திலேயே தாய் மொழிப் பள்ளிகள் தமது முக்கியத்தை உணர்த்தி நிற்கின்றன.

தமிழர்கள் தமது முக்கிய அடையாளமாய்க் கருதும் தாய் மொழியாம் தமிழை, புலம்பெயர் மண்ணில் வாழும் இரண்டாம் தலைமுறைக்குப் பயிற்றுவிக்கும் அனைவரும் கௌரவத்திற்கு உரியவர்களே. தமது சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகளும் தாய் மொழி பயிலவேண்டும் என்ற உயரிய உணர்வோடு அஸ்கர் , பாரும் பகுதியில் தமிழ் அறிவாலயத்தை ஆரம்பித்து நடாத்தும் அனைவரதும் தன்னலமற்ற பணிதொடர வாழ்த்துகிறோம். சகபாடசாலை என்ற அடிப்படையிலான ஒன்றிணைந்த பணிகளுக்கு முத்தமிழ் அறிவாலயக் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் என்ற உறுதியையும் இத்தருணம் வழங்கி கடந்த பத்தாண்டின் அனுபவங்களோடு எதிர்காலத்தை மேலும் செழுமைப்படுத்த தமிழ் அறிவாலயத்தை வாழ்த்துகிறோம்.

முத்தமிழ் அறிவாலயம்
V/ Tamilsk Norsk Forening
Harslebs G t 43
0578 Oslo
www. Muththamil.com

# வாழ்த்துச் செய்தி

அஸ்கர் பாறும் தமிழ் ஒன்றியத்தின் பத்தாண்டு நிறைவுதின வாழ்த்துக்கள்.

அஸ்கர் பாறும் பகுதியில் வாழும் தமிழர்களின் இரண்டாம் பரம்பரையினர் தாம் யார் என்னும் அடையாளத்தை அறிந்து கொள்வதற்காக தமிழ்மொழியையும் கலாச்சாரத்தையும் அறிமுகப் படுத்துவதில் பங்கு ஏற்று ஆற்றிவரும் சேவையின் பத்தாண்டு நிறைவு விழாவிற்க்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தமிழ் அறிவாலயத்தில் மொழி கற்பிப்பதற்க்கும், மொழியைக்கற்பதற்க்கும், ஏற்புடையதான கல்வியியல் (pedagogikk) திறனும் தமிழ் மொழியை வளர்ப்பதில் ஊக்கம் கொண்டு சேவையாற்றும் ஒவ்வொருவருடைய பங்குகளையும் நான் நேரில் கண்டடிறிந்தவன். உங்கள் அனைவருடைய தன்னலமற்ற சேவையும், பணிவும், ஆர்வமும், நடுநிலை பேணலும் இங்குள்ள தமிழர்களுக்கும், சிறார்களுக்கும் நிட்சயம் தமிழ் விழிப்புணர்ச்சியையும், சிறந்த வழ்க்கைத் தரத்தையும், அரசியல், பொருளியல், வாழ்வியல் வளத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை
இத்தமிழ் அறிவாலயம் எந்த நோக்கத்தோடு உருவாக்கபட்டதோ அந்த நோக்கம் நிலைத்திருந்து மேலும் பல்லாண்டு காலம் நீடித்திருக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

Ratnasingam Nagaratnam
Lektor Rommen skole

## அறிவாலய அதிபரின் வாழ்த்து

“உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு அதை உரக்கச்சொல்வோம் உலகுக்கு” என்ற சன்றோர் வாக்குக்கு இணங்க கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய எம் இனிய தமிழ் மொழிக்கு எமது மன்றத்தினால் மற்றொரு ஆண்டுவிழா எடுக்கும் இத்தருணத்தில் ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாண்டுவிழா சிறப்பாக அமைய ஆக்கமும் ஊக்கமும் நல்கிய நிர்வாகத்தின் கலைப்பொறுப்பாளர்கள் உட்பட சக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்று சங்கம் அமைத்து வளர்க்கப்பட்ட முத்தமிழை இன்றும் மங்காப்புகழுடன் வளர்க்கத்துடிக்கும் எமது மாணவமணவிகள், ஆசிரியர்கள் மற்றும் எமது பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவருக்கும் நமது பாராட்டுக்களைத்தெரிவித்துக் கொள்கிறேன். எமது அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயத்தில் பாலர்வகுப்பு முதல் ஆண்டு 9 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. தமிழ், கணிதம், ஆங்கிலம் மற்றும் நடனம், சங்கீதம், மிருதங்கம், keyboard ஆகிய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. எமது மாணவர்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல என்ற வாக்குக்கு இணங்க அவர்கள் பற்பல விளையாட்டுப்போட்டிகளிலும் பங்கெடுத்து வருகின்றனர். பலமுறை உதைப்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி உள்ளனர்.

எமது பாடசாலையின் வளர்ச்சியை நாம் நடாத்தும் விழாக்கள் மூலம் காணக்கூடியதாய் உள்ளதோடு எமது மாணவர்களின் தமிழ் அறிவையும் கலை, கலாச்சார பண்பாடுகளை விருத்தி செய்யும் தமிழ் மரபுகளை பேணிக்காக்கவும் இது ஒரு களமாக அமைகிறது. தமிழும் சமயங்களும் இரு கண்கள் எனப்போற்றப்படுகிறது. ஆனால் இன்று விஞ்சி வரும் விஞ்ஞான தொழில்நுட்பத்துறையினால் அவ்விரு கண்களும் கெட்டு விடுமோ என்று அஞ்சப்படுகிறது. சமய உண்மைகளையும் பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இந்த சாத்திரக்கூற்றுக்கிணங்க நம் இளைய தலைமுறை ஒழுகுவதற்கு இவ் ஆண்டுவிழா ஓர் அரிய சந்தர்ப்பம் இச்சந்தர்ப்பத்தை அஸ்கரோ பாரும் தமிழர் ஒன்றியம் எமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

பழங்காலந்தொட்டே தமிழருக்கெனசிறந்த பண்பாட்டு நெறிகள் வளர்ந்தோங்கியுள்ளன. தமிழ் பண்பாட்டில் புதையுண்டு கிடக்கும் கலைகலாச்சாரங்கள் வெளிச்சம் போட்டுக்காட்டும் காலக்கண்ணாடிகளாக அஸ்கரோபாரும் தமிழ் அறிவாலய மாணவமாணவிகள் திகழ வேண்டும் என உளமார வாத்துவத்தோடு இவ் இனிய விழா இனிதே அரங்கேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**வாழ்க தமிழ்! வளர்க அதன் புகழ்!**

அஸ்கரோபாரும் தமிழ் அறிவாலயம்
அதிபர்
திருமதி க.தனபாலன்

# அஸ்கர்-பாரும் தமிழ் அறிவாலயம் 10வது ஆண்டு விழா

1997இல் சுமார் இருபத்தைந்து மாணவர்களுடன் ஆரம்பித்த தமிழ் அறிவாலயம் இன்று அறுபது மாணவர்களைக் கொண்ட ஒரு கல்வி நிலையமாக வளர்ந்த நிலையில் தனது பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. நோர்வேயின் பெரிய நகரங்களான ஒஸ்லோ, பேர்கன் போன்றவற்றில் நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொண்ட தமிழ் பள்ளிக்கூடங்கள் உள்ளன. மிகவும் சிறிய அளவிலான தமிழ்ச்சமூகத்தைக் கொண்ட சண்விக்காவில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து, அதனை பத்து வருடங்கள் நன்கு நடாத்திவந்துள்ள ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் பாராட்ட வேண்டும்.தமிழ் அறிவாலயத்தில் அறுபது மாணவர்கள் கல்வி கற்கிறார்கள் என்பது அளவு ரீதியான ஒரு வளர்ச்சியை மட்டும் காட்டவில்லை. அங்கு பண்பு ரீதியான பன்முக விருத்தியும் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். இப்போது தமிழ் மொழியும் கணிதமும் மட்டுமின்றி ஆங்கிலமும் இசையும் பயிற்றப்படுகின்றன. அத்துடன் கலாச்சாரச் செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன. இளைய சந்ததியினரின் அறிவு விருத்திக்கும் ஆளுமை விருத்திக்கும் உதவும் ஒரு மையமாக தமிழ் அறிவாலயம் பரிணமித்துள்ளது மகிழ்ச்சி தருவதாகும். இந்தப்பாதையில் அறிவாலயம் தொடர்ந்து முன்னேறித் தன் சமூகப்பணியைத் தொடர வாழ்த்துகிறேன்.

பேராசிரியர்
ந.சண்முகரத்தினம்
அபிவிருத்திக்கற்கைதுறை
பல்கலைக்கழகம் ஒஸ்

இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை

**Tamilsk barn og ungdoms aktivitets senter**

## வாழ்த்து மடல்

அஸ்கர் பாரூம் தமிழ் அறிவாலயத்தில், அழகாக அரிச்சுவடியைப் பயில வைத்து ஆனந்தமாக ஆடல், பாடல், கலைகளையும் ஆசையுடன் கற்பித்து வரும் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலும் கள்ளம் கபடமிலா எம் தாயக பிஞ்சுகள் தம் தமிழ் அறிவாலயத்தின் 10வது ஆண்டு நிறைவை கொண்டாடுவதில் நாமும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஈரைந்து ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகள் நாட்டிய அஸ்கர் பாரூம் தமிழ் அறிவாலயத்திற்க்கு இஸ்ராவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலையின் பிறந்த நாள் வாழ்த்துக்ளும் உரித்தாகட்டும்..

-நன்றி



## வாழ்த்துக்கள்

10 ஆவது ஆண்டு விழா கொண்டாடும் அஸ்கர் பாரும் தமிழ் அறிவாலய சமூகத்தை மிகுந்த மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துக்கிறேன்.

புலம் பெயர்ந்த நாடுகளிலும் நோர்வேயிலும் மெல்லத் தமிழ் இனிச்சாகும் என அஞ்சப்பட்ட காலத்தில் உங்களைப் போன்று எழுந்த செயல் வீரர்களால் தான் இன்று தமிழ் வாழ்கிறது.

உங்கள் அறிவாலயம் ஆரம்பித்த நாட்களில் அதிபராக பணியாற்றிய வகையில் உங்கள் அனைவரையும் , உங்கள் சீரிய முயற்சிகளை ஆதரித்த நோர்வேயிய பெருமக்களையும், அஸ்கர் பாரும் மாநகர சபையையும் நன்றியுடன் நினைவுகூறுகிறேன்.

நோர்வேயிய சமூகத்தின் மத்தியில் நமது பிள்ளைகள் கலாச்சார பெருமிதத்துடன் தலை நிமிர்கிற வாய்ப்பு உங்களைப் போன்ற தாய்மொழிக்கல்வி ஆர்வலர்களால் தான் உருவானது.

வாழையடி வாழையாக உங்கள் பணி நிலைத்து நிற்க வாழ்த்துகிறேன்.

வாசுகி ஜெயபாலன்

இசை ஆசிரியை

(ஒஸ்லோ மாநகர சபை இசை-கலைக் கல்லூரி)



# தலைவர் வாழ்த்துரை

பத்து ஆண்டினை நிறைவு செய்துள்ள Asker & Bærum தமிழர் ஒன்றியத்தின் தமிழறிவாலயத்தினை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழருக்கே உரித்தான முன்நோக்கிய பாதையில் சிந்தித்து 1994 இல் சொற்ப அங்கத்தவர்களைக் கொண்டு Asker & Bærum தமிழர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. ஒன்றியத்தின் படிநிலையான வளர்ச்சியில் எதிர்கால இளஞ்சமுதாயத்தினர் தமிழ் மொழியினைக் கற்று தமிழரின் கலாச்சார விழுமியங்களை அறிந்துகொள்வதற்கென 1997 இல் இருபது மாணவர்களையும் மூன்று ஆசிரியர்களையும் கொண்டு தமிழ் அறிவாலயம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்களையும் எட்டு ஆசிரியர்களையும் உள்ளடக்கிய ஓர் கல்விக் கட்டமைப்பினால் பினணக்கப்பட்டுள்ளது. இவ் அமைப்பிற்கு இவ்வருடம் தலைவராக இருப்பதை இட்டு பெருமிதம் அடைகின்றேன்.

இவ்வாறு ஒளிர்கின்ற தமிழறிவாலயத்தில் தமிழர்களின் கலை கலாச்சார விழுமியங்களை வெளிக்கொண்டு வருவதற்காக பரதநாட்டியம் கர்நாடக சங்கீதம் மிருதங்கம் என்பனவற்றுடன் மேலத்தேய இசைக்கருவிகயான Keyboard, Drum போன்றனவும் பயிற்றுவிக்கப்படுகின்றது. மாணவர்களின் நுண்ணறிவினை வளர்ப்பதறகென கணணி ஆங்கிலம் மற்றும் கணிதம் கற்பிக்கப்படுகின்றமை மேலான விடயமாகும். மாணவர்களிடையே ஒற்றுமை விட்டுக்கொடுப்பு போன்ற சிறந்த பண்பிணை வளர்க்கும் விளையாட்டுத்துறையில் துரித வளர்ச்சிப் போக்கு வியப்பிற்குறிய தொன்றாகும். தனித்து மாணவர்களிடையே நின்றுவிடாது அங்கத்தவர்களுக்கான கணணி வகுப்பு நடைபெறுதல் பாராட்டத்தக்கது. இந்நாட்டில் பல கலாச்சார சமூகங்களுக்குள் தமிழரின் தனித்துவப் பன்பிணை எடுத்துக்காட்டுவதற்கும் எமது வருங்கால சந்ததியினரை சிறப்பாக வழிநடத்தவும் தமிழறிவாலயத்தின் சேவை அவசியமான தொன்றாகும். இனி வரும் காலங்களிள் இதன் வளர்ச்சி மலைபோல் உயர எனது ஆசிகள். இவ்வாண்டைப்போன்று எந்தவொரு ஆண்டிலும் ஆர்வமுள்ள அனைவரும் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்று பட்டு செயற்படுவேம்.

**வாழ்க தமிழர் ஒன்றியம் வளர்க தமிழறிவாலயம்**

நன்றி

அன்புடன்
பரமநாதன் குலம்
(தலைவர்)
தமிழர் ஒன்றியம

# வாழ்த்துரை

இன்று அஸ்கர் - பாரும் தமிழ் அறிவாலயம் தமிழ்க் கல்வி வரலாற்றில் ஒரு புதிய தசாப்தத்தில் தடம் பதிக்கின்றது.எங்கள் இளந்தளிர்களுடன் பத்தாண்டு காலம் பயணம் செய்த இனிய நினைவுகள் மனதிற்கு இதமளிக்கின்றது. எமக்கு முற்றிலும் புதிய சூழலில் வாழ்க்கையை ஆரம்பிக்க முனைந்தபோது நாம் சந்தித்த அனைத்தும் சவால்களாகவே இருந்தது. தாயக மண்ணில் எதற்காக போராடத் தொடங்கினோமோ அந்த சமூக அடையாளங்களை புதிய வாழிடத்தில் தொலைத்துவிட நாம் ஒருபோதும் விரும்பவில்லை. அதிலும் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை மாற்றுக் கருத்து இன்றி அனைவரும் ஏற்றுக்கொண்டோம். தாய்மொழிக் கல்வி ஒரு குழந்தையின் அடிப்படை உரிமையாகும். அந்த அடிப்படை உரிமைக்கு செயல்வடிவம் கொடுப்பதில் முரண்பாடுகளுக்கு அப்பால் நாம் அனைவரும் கைகோர்த்து நின்றோம்.

குழந்தைகளுக்கு தாய்மொழிக் கல்விக்கூடத்தை உருவாக்கி நிர்வகிப்பதில் பல நெருக்கடிகள் உருவாகின. பல நெருக்கடிகள் முரண்பாடுகளாக உருமாறியது. வேற்றுமையில் இணக்கம் காண்பது என்பது கல்வியின் அடிப்படை இலக்குகளில் ஒன்றாகும். கருத்து முரண்பாடுகள் விவாதிக்கப்பட்டு இணக்கம் காணப்பட்ட களங்களே காலப்போக்கில் கல்விக்கூடங்களாக மாறின என்பதற்கு கிரேக்க, இந்திய வரலாற்றில் பல ஆதாரங்கள் உள்ளன. சமூக முரண்பாடுகளினால் புரையோடியிருந்த குரோதங்களும் வேறுபாடுகளும் கல்விக்கூடங்களின் வளர்ச்சியினால் மறைந்திருக்கின்றது. வரலாற்றில் கல்விக்கூடங்கள் கூட்டமாக வாழ்ந்த சமூக விலங்குகளை கூடி வாழும் அறிவியற் சமூகமாக மாற்றியிருக்கின்றது.தமிழ்க் கல்விக்கூடத்தை நிர்வகிப்பத்தில் நாம் கற்றுக்கொண்ட பாடத்தில் இனிப்பும் கசப்பும் நிறைந்துள்ளது. எமது சமூக வளர்ச்சிக்கான இலக்கு தொடுவானம் போன்றதொரு தொலைவில் உள்ளது. அதை எங்கள் குழந்தைகள் சென்றடைய பல ஆயிரம் கைகளின் ஒருமித்த உழைப்புத் தேவைப்படுகின்றது. ஆக்கபூர்வமான கருத்துப்பரிமாற்றமும் விட்டுக் கொடுப்புக்களும் முரண்பாடுகளையும் குரோதங்களையும் களையும்.

எங்கள் மாணவர்களுக்காக வெளியிடப்பட்ட "தமிழ் அறிவோம்" என்ற நூல்களை எழுதித் தயாரித்த அன்பு நண்பர்களுக்கும், ஆக்கபூர்வமான உதவிகள் செய்த அன்பு நண்பர் வழக்கறிஞர் திரு கணபதிப்பிள்ளை சிவபாதம், மற்றும் பல சிரமங்களுக்கு மத்தியில் கல்விப்பணியில் தொடரும் அதிபர்,ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்கள். புதிய தசாப்தத்தில் எங்கள் கல்விக்கூடம் மேலும் சிறப்பாக பணியாற்ற நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்



அறிவாலய மாணவர்கள்



ஆசிரியர்கள்



ஆண்டு-5 மாணவர்கள் அதிபருடன்



ஆண்டு-2 மாணவர்கள் ஆசிரியருடன்



ஆண்டு-8,9 மாணவர்கள் ஆசிரியர்களுடன்



ஆண்டு-1 மாணவர்கள் ஆசிரியருடன்



ஆண்டு-3 மாணவர்கள் ஆசிரியருடன்



ஆண்டு-6 மாணவர்கள் ஆசிரியருடன்



ஆண்டு-7 மாணவர்கள் ஆசிரியருடன்



ஆண்டு-4 மாணவர்கள் ஆசிரியருடன்



நடனமாணவர்கள் ஆசிரியருடன்



சங்கீத மாணவர்கள் ஆசிரியருடன்

## புலம் பெயர்வாழ்வும் வளர்ச்சியும்

அஸ்கர் பாரும் தமிழ் அறிவாலயமானது ஈழத்தாய்நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து வந்து வாழும் மக்கள் அவர்களது பிள்ளைகளுக்கு தமிழ் கல்வியை ஊட்டி வளர்க்கும் அதேவேளை எங்களுக்கே உரித்தான கலை கலாச்சார பண்பாடுகளை ஊட்டி வளர்க்கும் ஓர் ஆலயமாக திகழ்வதைப் பார்க்கும் போது மனம் பூரிப்படைகின்றது.

இன்று புலம் பெயர்ந்து வாழும் வாழ்விடங்களிலே எங்கள் சிறார்கள் இருவேறுபட்ட கலாச்சார முறைமைகளுக்குள் வாழ்வது மட்டுமல்லாது மொழி ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் வாழவேண்டியவர்களாக உள்ளனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் சிறார்களை வழிநடத்தவேண்டிய ஒரு அத்தியாவசியத் தேவை இப்படியான கல்விக்கூடங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் அஸ்கர் பாரும் தமிழ் அறிவாலயமானது தனது பணியைத் தொடர்ந்து மேன்மேலும் வளர மனமார வாழ்த்துகின்றேன்.

இன்று தாய்நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்புக்கள் பாரம்பரியங்கள், கல்விமேம்பாடுகள் அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்ற இன்றைய காலகட்டத்தில் அதனைப் பேணிப்பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு வழங்க வேண்டிய ஒரு வரலாற்றுக் கடமை எங்களிடம் சேர்ந்துள்ளது. ஆகவே இன்று இவ்வாறான அம்சங்களை கவனத்தில் எடுத்து ஒவ்வொரு கல்விக்கூடங்களும் பொதுச்சங்கங்களும் எங்கள் கலை கலாச்சார பண்பாடுகளை வளர்த்து ஓர் அழிக்கமுடியாத சமூகமாக மாற்றும் கடமையை பொறுப்பேற்க வேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலே தாய்நாட்டில் பல இடங்களிலும் இருந்து வந்தவர்கள், அங்கு பிறந்து வளர்ந்து வந்த பிள்ளைகள், புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலே பிறந்து வளர்ந்தவர்களென பலதரப்பட்டவர்கள் சமூகமாக வாழ்கின்றார்கள். இவ்வாறாக வாழ்பவர்களிடையே பலதரபட்ட கருத்து மூரன்பாடுகள் இருந்தாலும் ''வேற்றுமையில் ஒற்றுமை காண்பவர்கள்'' என்பதற்கிணங்க நாமோர் சமூகம், எங்களுக்கென்று ஒரு கலைகலாச்சார பண்பாட்டு வழக்கங்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொண்டு ஓர் உறுதியான அழிக்க முடியாத பலங்கொண்ட சமூகமாக வாழ்வதற்கு விட்டுக்கொடுப்புக்கள் மத்தியிலே வாழப்பழகிக்ககொள்ள வேண்டும்.

எங்கள் சிறார்களுக்கு எங்கள் சமூகக் கலாச்சாரத் தொன்மைகளை பண்பாடுகளை விளங்கிக்கொள்ள கூடிய வகையில் கிருஸ்துக்கு முன் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மொகஞ்சதாரோ கரப்பா, மொசப்ப தேனியா போன்ற இடங்களில் ஒரு நாகரீகமான சமூகமாக செழிப்புற்று

வளர்ந்திருந்தமையை, உலக ஆய்வாளர்களே ஏற்றுக்கொண்டமையை எடுத்துக் கூறவேண்டும். புராண இதிகாச காவியங்களில் காணப்படும் வீரகாவியங்கள், அறநெறிக் கருத்துக்களை எடுத்துக் கூறி அவற்றின் வாசனையைத் தூண்டி ஆற்றலை வளர்க்க வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களின் சொத்துக்கள் நிலபுலன்கள் ஈழமண்ணில் நிலைத்திருக்கின்றது. ஒவ்வொருவரும் பிறந்த மண்ணிற்கு திரும்பச் செல்வோம், நாட்டை வளர்த்தெடுப்போம், பிரிந்த உற்றார் உறவினருடன் சேர்ந்து வாழுவோம் என்ற அங்கலாய்புடனேயே வாழ்ந்து வருகின்றோம். இதற்கு எங்கள் கலாச்சாரப் பண்பாடுகள் எங்களிடம் வேரூன்றிப் போனமையே அடிப்படையாகின்றது. இன்று தாய் மண்ணில் அழிந்து சிதைந்து தரைமட்டமாக்கப்பட்ட ஊர்கள் மெலிந்து நொந்து ஊனமுற்ற மக்கள் கூட்டம் கஞ்சிக்குக் கையேந்தும் பரிதாபமான நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எமது மண்ணில் கலைகலாச்சாரம் வளர்க்கப்பட்ட சங்கங்கள், ஸ்தாபனங்கள் இன்று பல அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் உள்ளன. தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் இன்று எங்கள் தமிழ் கலைகலாச்சார விழுமியங்களைப் பேணிக்காத்து எங்கள் சமூக அடையாளங்களை நிலைநிறுத்த வேண்டிய கடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களாகிய எங்களிடம் உள்ளது. எப்படி எமது மண்ணில் கலாச்சார வளம் செழுமை பெற்றுக் காணப்பட்டதோ அவ்வாறாக புலம்பெயர்வாழ் மக்களிடமும் செழுமை பெற இவ்வாறான அமைப்புக்கள் முன்னின்று செயற்பட வேண்டும். இளைய சந்ததியினருக்கு இவற்றை ஊட்டி கலாச்சாரப் பெருமையினை அழியாது பேணிக்காத்தல் வேண்டும். பாடப்புத்தகங்களிலே கலாச்சார மரபுகளை அறிமுகப்படுத்தக்கூடிய அம்சங்களைப் புகுத்தி இளையோரிடத்தே போய்ச்சேர வழியேற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இன்று நாம் நாட்டிலே ஏற்பட்ட சூழ்நிலைகாரணமாக புலம்பெயர்ந்து பல நாடுகளில் வசித்து வருகின்றோம். கனடா, லண்டன், அவுஸ்ரேலியா, நோர்வே ஏன் லத்தீன் அமெரிக்கா, சுமத்திரா என்று வாழ்ந்தால் என்ன, நாம் ஓர் சமூகம். எங்களுக்கென்றொரு கலாச்சாரம் உண்டு. ஏன் நாம் ஓர் வேரூன்றிய சமூகமாக வாழ முடியாது? ஏன் மலேசியா, சிங்கப்பூர் மொரிசியஸ் என்ற பல நாடுகளில் சமூகமாக வாழவில்லையா? நாம் வேறுபட்ட மேற்கத்தைய முறைமையை கடைப்பிக்கும் நாடுகளில் வாழ்ந்து வந்தாலும் ஏன் நாம் எங்கள் கலைகலாச்சார பழக்கவழக்கங்களுடன் வாழமுடியாது? வாழும் நாடுகளில் உள்ள சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்து வாழ்விடங்களில் உள்ளவர்களின் நற்பண்புகள் கலைகலாச்சார அம்சங்களை உள்வாங்கி ஒவ்வாதவற்றைப் புறந்தள்ளி ஏன் வாழமுடியாது? அதேவேளை எங்கள் கலாச்சாரங்களில் உள்ள மூடநம்பிக்கைகளைத் தூக்கி எறிந்து சரியான பண்புகளைக் கடைப்பிடித்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறாக வாழப்பழகும் போது ஓர் அழிக்க முடியாத பண்பான சமுகமாக என்றும் இருப்போம். நாம் இடம் பெயர்ந்தவர்களே ஒழிய கொத்தடிமைகளாக எந்த நாட்டிற்கும் கொண்டு வரப்பட்டவர்கள் அல்ல. எங்களுக்கென்ற ஓர் பின்புலம் இருக்கின்றது. எங்களுக்கென்றோர் கலாச்சார முறைமை இருக்கின்றது, ஒவ்வொருவருக்கும் நிலபுலன்கள்,

உற்றார் உறவினர்கள் இருக்கிறார்கள் என்பதை சிறார்களுக்குப் பெற்றார் எடுத்துக்கூறி பிள்ளைகளை வளர்த்தல் வேண்டும். பிறப்புரிமை மரபில் நான் தமிழர் வழித் தோன்றல் என்பதை சமூகவியல் கோட்பாட்டில் என்றும் மறுக்க முடியாது. ஆதலால் நாம் ஓர் அழிக்க மூடியாத சமூகமாக வாழ கலைகலாச்சாரத்தை இப்படியான அறிவாலயங்களுடாக வளர்த்துக்கொள்ளல் வேண்டும்.

எங்கள் தாய் நாடு உண்மையிலே பண்பாடான ஓர் கலை கலாச்சாரத்தைக் கொண்டு வாழ்ந்த பல் துறைசார் புத்தி ஜீவிகள், கலைஞர்கள் தொழில்சார் நிபுணர்கள் என வாழ்ந்த மண். கல்வியில் உலகிலேயே முன்னிலையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடக்கூடியது. இன்றும் கூட புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் எத்தனையோ துறைபோன அறிஞர்களாக எம் நாட்டவர் இன்றும் வாழ்கின்றார்கள். நாட்டிலே ஏற்பட்ட பலதரப்பட்டவர்களின் நெருக்கடிகளினால் உயிரத் தஞ்சம் கோரியும், வேலைவாய்ப்பு நிமிர்த்தமும் இடம் பெயர்ந்து பல தரப்பட்ட நாடுகளில் வசித்து வருகின்றார்கள். எங்கு வசித்து வந்தாலும் அவர்கள் பின்புலம் தாய்மண்ணிற்கே உரித்தானவர்களாகவே வாழ்கின்றனர். இவை தமிழர்கள் என்பதை அடையாளப்படுத்தி நிற்கின்றது. இந்த வகைகளில் எம் சிறார்களும் கல்வியில் தேர்ச்சி பெற்று தொழில்சார் நிபுணர்களாகவும் கலைஞர்களாகவும் வளர்ந்து எங்கள் கலாச்சார பழக்க வழக்கங்களைக் கடைபிடித்து பேணிக் காப்பதோடு புத்திஜீவிகளாக அழிக்க முடியாத சமூகமாக வளர இவ்வாறான பாடசாலைகள் முன்னின்று உழைக்க வேண்டிய அவசியம் தோன்றியுள்மையை குறிப்பிட விரும்புகின்றேன். குறிப்பாக எங்கள் கலை கலாச்சார பண்பாடுகளை வளப்படுத்துவதில் பங்காளர்களாக இருப்பவர்கள் புத்திஜீவிகள். இவர்கள் தங்கள் ஆக்கங்களைப் படைக்கும் போதும் விமர்சனங்களை வைக்கும் போதும் சமூகங்களைக் குழப்பாது நாம் ஓர் இனம், எங்கள் சமூகத்தை கட்டிக் காக்கும் பொறுப்பு எங்களிடம் உள்ளது என்ற அடிப்படைக் கோட்பாட்டை ஏற்று மிகத்தெளிவாக கருத்துக்களைக் கூற முன்வரவேண்டும். ஊடகத்துறையினரும் கலைஞர்கள் வட்டமும் அவதானமாக செயல்பட வேண்டிய ஓர் காலகட்டத்தில் வாழுகின்றோம். இவர்கள் பொறுப்பற்ற விதத்தில் உண்மையானவற்றை மறைத்தோ திரிவுபடுத்தியோ கூறுவார்களாக இருந்தால் எம் சிறார்கள் அவற்றை நம்பி தவறான வழிகளில் தங்களை வளர்க்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள். ஆதலால் இவர்கள் ஆக்க பூர்வமான கருத்துக்களைக் கூறுவதோடு சரியான கலைகலாச்சாரப் பண்புகளை வெளிப்படுத்துபவர்களாக இருத்தல் வேண்டும். பிழைப்புவாத கலைகலாச்சார மரபுகளைத் தூக்கி எறிந்து விட்டு மனிதநேயத்தை,ஒற்றுமையை வளர்க்கக் கூடிய ஆற்றல் உள்ள ஆக்கங்களைப் படைத்தல் வேண்டும். கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் நாம் ஓர் தாய் மக்கள் என்ற உணர்வோடு அரவணைத்துச் செல்லும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆக்கங்களைப் படைத்தல் வேண்டும். கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் நாம் ஓர் தாய் மக்கள் என்ற உணர்வோடு அரவணைத்துச் செல்லும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக பெற்றார் இவ்வாறான பாடசாலைகள் வளர அவர்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும். அதேவேளை தமது பிள்ளைகள் விடயத்தில் அவர்கள் வளர்ச்சியில் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும். பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளைக் கவனத்தில் எடுத்து சமூகத்தில் கலாச்சாரப் பண்புகளை ஏற்று நற்பிரஜைகளாக கல்விச்சிறப்புற்று நிபுனர்களாக வாழ வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். கல்வியில் பிள்ளைகளின் விருப்புக்கு மாறாக இவர் டாக்கராகவோ, இஞ்சினியர்களாகவோ, கணக்காளர்களாகவோ வரவேண்டும் என்று வற்புறுத்தாது அவர்கள் எந்தத் துறையை விரும்புகின்றார்ளோ அந்தத் துறையில் வளர வாய்பை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். தொழில்சார் கல்வி முறையை ஏற்று அவர்களின் சீரான வழிகாட்டியாக இருக்கும் மனப்பாங்கை ஏற்கும் தாய் தந்தையாரக வாழக்கூடிய பக்குவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள் சபிக்கப்பட்டவர்கள் அல்ல. வீரகாவியம் படைத்தவர்கள் என்பதையம் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்தவர்கள் என்பதையும் ஒவ்வொரு பெற்றோரும் தாம் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறி தம் பிள்ளைகளக்கு ஓர் சிறந்த தாய் தந்தையாக இருந்து அவர்கள் முன்னேற்றத்திற்கு உற்ற துணையாகவும், வழிகாட்டியாகவும் இருந்து தம் பிள்ளைகளை நேர்மை, அஞ்சாமை, துணிவு, மனித நேயம் என்பவற்றை புகட்டி பிறந்த மண்ணின் பெருமையை தேடித்தரக்கூடியவர்களை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும். தாய்மண்ணில் மீண்டும் காலடி வைப்போம் என்ற ஆதங்கத்தோடு வாழ்பவர்களுக்கு இவ்வாறான கல்விக் கூடங்கள் மரபுவழி மூதாதையரின் கலைகலாச்சாரப் பண்புகள் வளர்ந்து ஒரு தமிழ் மைந்தனாக சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழும் ஒரு சமூகத்தை வளர்த்தெடுக்கும் பணி தொடர மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

Dr. க.சிவபாதம்
சட்டத்தரணி



# என்கடன் பணிசெய்வதே-

சிறந்த தானங்களில் கல்வித்தானமும் முதன்மை பெறுகிறது. கல்வி தொடர்பான சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்த போதெல்லாம், இலங்கையிலும், இங்கேயும் அதைச் சரியாகப் செயற்படுத்தியிருக்கிறேன். பல நல்ல மாணவர்கள் உருவாவதற்கு உதவியாகவும் இருந்திருக்கிறேன்.

1999 இல் Asker & Bærum தமிழ் அறிவாலயத்தின் பொறுப்பாளர் என்னும் பதவி எனக்கு கிடைத்தது. இப்பதவி இங்குவாழும் தமிழ்ச்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதற்கு எனக்கு கிடைத்த ஒரு பெரிய சந்தர்ப்பமாகும்.

எனது காலத்தில் முடிந்தவரை பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறேன். இது எனக்கு ஆத்ம திருப்தியை தந்திருக்கிறது.

ஒரு பாடசாலையை உருவாக்குவதும், அதைத் தொடர்ந்து நடாத்துவதும் எவ்வளவு கடினமானது என்பதை பலரும் அறிவார்கள்.

தமிழறிவாலயம் மட்டுமல்லாமல் எந்தவொரு கல்விக்கூடத்தையும் வளர்ப்பதற்காக Asker&Bærum வாழ் தமிழர்களைப்போல் ஒன்றிணைந்து பாடுபடுவோம்.

தமிழறிவாலயத்தின் வளர்சிக்காக, எங்கிருந்தாலும் எந்நேரமும் எனது பணிதொடரும்.

## வாழ்க தமிழறிவாலயம்! வளர்க தமிழ்மொழி!

நன்றியுடன்
க.சிவானந்தன்.



Rektor

# கலையின் வளர்ச்சி-

தமிழ் அறிவாலயம் ஆரம்பிக்கப்பட்டு 10ஆண்டுகள் நிறைவுபெறும் இவ்வாண்டில், அறிவாலயத்தின் கலைவளர்ச்சி பற்றிய சிறிய கண்ணோட்டம்.

தமிழர் தம் பண்பாட்டுப் பொக்கிஷங்களாகக் கருதத்தப்படுபவை அவர்களது அழகியற் கலைகளான இயல் ,இசை, நாடகம், என்பனவாகும். அன்று தொட்டு இன்று வரை கலை கலாச்சாரம் பண்பாடு என்பவற்றை பேணுவதில் தமிழர்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நம் கலை, ஆரம்பமாவது கோவிலிலும், கோவில் அமைப்பிலும், வழிபாட்டிலும் நமது கலைகள் இடம் பெறுகின்றன. கீதம், வாத்தியம், நிருத்தியம் மூலம் இறைவனை அர்ச்சிக்க வேண்டுமெனப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. நம் வாழ்க்கையில் சிற்றின்பத்தில் மூழ்காது இறைநெறியில், பக்தி சிரத்தையுடன் சென்று பேரின்பத்தை அடைவதே கலைகளால் நாம் அடையும் பயனாகும்.

இறைவனால் படைக்கப்பட்ட பல்வேறு உயிர்களில் மனிதன் மகா பாக்கியசாலி, காரணம் அவன் பகுத்தறிவுடையவன். பகுத்தறிவினால் அவன் செய்யும் சாதனைகள் பலவாகும். அந்த வகையில் 1997இல் அஸ்கரோபாருமில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அறிவாலயத்தில், அடுத்தடுத்த வருடங்களில் கர்நாடக சங்கீத வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழர்களின் பாரம்பரிய கலையான பரதநாட்டியம் ஆரம்பிக்கப்பட்டது, அதன்பின் வயலின், சுரஇசைத்தட்டு, மிருதங்கம் போன்ற கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருவதையிட்டு அஸ்கரோபாரும் வாழ் தமிழர்கள் மகிழ்ச்சியடையவேண்டும். அத்துடன் அறிவாலயத்தில் பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் கலைக்கூடத்தில் நடைபெறும் கலைவகுப்புகளில் பயின்று வருவது எமக்கு மகிழ்ச்சியே. இக் கலைகள் அழியாது வழிவழியாக வளர்ந்து வரும் புதிய தலைமுறையினரிடம் ஒப்படைப்பதே எமது பாடசாலையின் நோக்கமாகும். அந்த வகையில் தமிழ் அறிவாலயத்தில் பயின்று அங்கேயே, பரதநாட்டிய ஆசிரியராக பணியாற்றும் செல்வி அபிநயா.ஜெயசீலராஜா மற்றும் கர்நாடக சங்கீத ஆசிரியராக பணியாற்றும் சங்கீதகலாஜோதி செல்வி கவிதா.சிவானந்தன் ஆகிய இருவரும் பாராட்டுக்குரியவர்களே. அஸ்கரோபாரும் தமிழ் அறிவாலயத்தில், இயங்கிவரும் இக்கலைக்கூடத்தின் வளர்ச்சி மென் மேலும் வளர எமது ஒன்றியத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த 10ஆண்டுகளில் பொறுப்போடு கலையை வளர்க்க அரும்பாடுபட்ட அனைத்து கலைப் பொறுப்பாளர்களுக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்சியடைகிறோம். அத்துடன் எதிர் வரும் காலங்களிலும் எல்லோரும் ஒன்றிணைந்து கலையை வளர்ப்பது மட்டுமல்லாது நமது கலாச்சாரம் அழியாது பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

என்றும் நன்றியுடன்
கலைத்துறைச்செயலர்
.உபகலைத்துறைச்செயலர்



# 10வது ஆண்டு நிறைவு

தமிழுடன் தமிழ் கலைகளை் பல எங்கள் சிறார்களுக்கு ஊட்டி
நாளை நமது செல்வங்கள் தம் வாழ்வில் மேலோங்க வழிகாட்டி

அன்று பத்து ஆண்டுகளிற்கு முன் அஸ்கரோ பாருமில் தோன்றி

இன்று வெற்றி நடை போடும் அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயமே!

என்றும் உன் வாழ்வில் நிறைவோடு புகழ் சேர்க்க போற்றி

உன் பிறந்த நாளில் வாயார வாழ்த்தி நிற்கின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!
வாழியவே எங்கள் அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயமே!

Asker &
Bærum
தமிழர் ஒன்றிய
விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்
ஜேம்ஸ் ஜெயசீலராஜ்



# வாழ்த்துக்கள்!

இன்று 10வது ஆண்டுநிறைவைக் காணும் அஸ்கர் & பேரும் தமிழ் அறிவாலயத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!
நான் முதன்முதலில் சங்கீதம் பயிலத்தொடங்கிய பாடசாலையிலேயே இப்பொழுது சங்கீத ஆசிரியையாக பணிபுரிவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை அளித்த அஸ்கர் & பேரும் தமிழ் அறிவாலய நிர்வாகத்திற்கு எனது நன்றிகள்.

சங்கீதம் என்பது சிறந்த கலைகளில் ஒன்றாகும். இக்கலையை இந்த புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் சிறார்களுக்கு கற்பிப்பதை நான் மிகவும் வரவேற்கின்றேன். சங்கீதம் பயிலுவதால் எமக்கு பல நற்குணங்கள் விருத்தியாகின்றன. அத்துடன் அது எமக்கு மனதிருப்தியையும் பேரின்பத்தையும் உண்டாக்குகின்றது. இவ்வாறான கலையை நாம் அழியவிடாமல் தொடர்ந்தும் இந்த புலம்பெயர்ந்த நாடுகளில் கற்பிக்கவேண்டும் என்பது எனது அவாவாகும்.

**தமிழ் அறிவாலயம் மேலும் மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள்!**

- கவிதா சிவானந்தன் -



# எமக்கு தமிழறிவு தந்த தமிழ் அறிவாலயம்!

10வது ஆண்டு நிறைவு விழாவைக்காணும் அஸ்கர் & பேரும் தமிழ் அறிவாலயத்தை பழைய மாணவர்களாகிய நாங்கள் வாழ்த்துகின்றோம். நாங்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறவேண்டும். ஏனெனில் நாங்கள் இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தாலும், எங்களுடைய தாய்மொழியான தமிழை படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்ததை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். இதற்காக ஒழுங்குபடுத்தி தந்த எங்களுடைய பெற்றோர்களுக்கே நாங்கள் நன்றி கூறவேண்டும்.

தமிழ் தெரிந்திருப்பதால் பல நன்மைகள் உண்டென்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். எங்களுடைய உறவினர்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கு தழிழ் மிகவும் அவசியமாக இருக்கின்றது, குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் உறவுகளை சந்திக்கும்பொழுதோ அல்லது அவர்களுடன் தொலைபேசியில் கதைக்கும்பொழுதோ தமிழ் மிகவும் உதவுகின்றது. தமிழ் தெரிந்திருப்பதால் நோர்வேஜிய பாடசாலையிலும்கூட எங்களுக்கு பயனுள்ளதான இருக்கின்றது.எங்களில் பலர் நோர்வேஜிய பாடசாலையில் தமிழ்ப்பரீட்சையில் அதிஉயர் புள்ளிகளுடன் சித்தியடைந்திருப்பது குறிப்பிடதக்கதாகும். இதற்காக நாங்கள் அஸ்கர் & பேரும் தமிழ் அறிவாலயத்திற்கு நன்றிகள் கூற கடமைப்பட்டிருக்கின்றோம்.

அஸ்கர் & பேரும் தமிழ் அறிவாலயம் தமிழை மட்டும் படிப்பிக்காமல், கணிதம், கணனி, ஆங்கிலம், மிருதங்கம், keyboard, நடனம் மற்றும் சங்கீதம் போன்ற பாடங்களை படிப்பிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். தழிழ் மொழி மற்றும் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை தெரிந்திருப்பதில் நாங்கள் பெருமை அடைகின்றோம். பாடசாலை தொடர்ந்தும் வளர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

- பழைய மாணவர்கள் -

(சைரன், அபிநயா, கவிதா)



# Asker&Bærum தமிழ் அறிவாலயம்

இந்த அறிவாலயமானது, 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சுமார் இருபது பிள்ளைகளுடன் ஆரம்பித்து, இன்று சுமார் அறுபது பிள்ளைகளுக்கு மேலாக கல்வியறிவு பெறுகின்றனர். தமிழ் மொழியை தரமானமுறையிலும், ஒழுங்காகவும், பிள்ளைகள் கற்றுக் கொள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உறுதுணையாக நிற்கின்றனர்.

தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் பொது அறிவை பிள்ளைகளுக்கு ஊட்டவும், இந்த அறிவாலயம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இந்த கல்வி நிறுவனமானது பத்து ஆண்டுகள் வளர்ச்சியைக்கண்டு பெற்றார்கள், ஆசிரியர்கள், கல்விகற்கும் பிள்ளைகள் யாவரும் பெருமித மடைந்துநிற்கும் இவ்வேளையில் இந்தக் கல்விக்கூடம் மிகவும் சிறந்த தரத்தினைப் பெற்ற பிள்ளைகளை உருவாக்கியுள்ளமை, காணக்கூடியதாக உள்ளது. இதே போல் இன்னும் பல ஆண்டுகள் இந்த அறிவாலயம் அதனது சேவையை திறம்பட செய்யவேண்டுமென வாழ்த்துகிறேன்.

திரு. கிருஸ்ணபிள்ளை-சிவலிங்கம்
ஆசிரியர்

---

## எப்போதும் பாராட்டுவோம்.

தமிழ் அறிலாலயம் ஆரம்பித்து பத்து ஆண்டுகள் என்பது ஆச்சரியமானது. எனது பணிதொடங்கி ஆறு ஆண்டுகள் நிறைவுபெறும் இவ்வாண்டில் தமிழ் அறிவாலயம் பத்தாவது ஆண்டைக் கொண்டாடுவது மகிழ்ச்சியே. எனது பணி ஆரம்பித்த நாளில் இருந்து இன்றுவரை ஒவ்வொரு மாணவர்களினதும் வளர்ச்சி எனக்கு ஊக்கமளிக்கிறது.

மாணவர்களைவிட பெற்றோர்களின் முயற்சி, ஆர்வம் அபாரமானது. இன்று தமிழ் அறிவாலய மாணவர்கள் தனியான இசைக்குழு வாக திறமையாகச் செயற்பட தயாராக இருக்கிறார்கள் என்பது எனக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் மகிழ்ச்சியே.

இந்த மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் அனைவரையும் பாராட்டுகிறேன். அத்துடன் தமிழ் அறிவாலயம் மேலும் மேலும் வளர எனது மனமார்ந்த வாழ்துகள்.

திரு. கணேஸ் (இசையாசிரியர்)
தமிழ் அறிவாலயம்
அஸ்கர், பாரும்

# நடன ஆசிரியர்

தோன்றி ஒரு தசாப்தத்தை எட்டி வீறுநடை போடும்
அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலயமே!

உன் தோற்றம் எங்களுக்கு ஓர் வசந்தம். அந்த
வசந்தத்தைப் பாட நான் கவி அல்ல எனினும்,

உனது பத்தாவது பிறந்த நாளிலே உனது
அபிலாசைகளும் நோக்கங்களும்
நிறைவேறி, நீ என்றும் பேரோடும், புகழோடும்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு

வாழியவே எங்கள் தமிழ் அறிவாலயமே!

அஸ்கரோ பாரும்
தமிழ் அறிவாலய
**நடன ஆசிரியர்**
அபினயா



# கடந்தவை 10 வருடங்கள் அதுபற்றி
# உங்களுடன் 2 நிமிடங்கள்

பலரது பத்து வருட உழைப்பு, ஊக்கம், முயற்சி பல தமிழ் மாணவர்களின் தமிழ், கணணி, கலை மற்றும் விளையாட்டு திறமைகளை ஊக்குவித்து அல்லது வளர்த்தது என்பதனை யாரும் மறக்கமுடியாது.

பல தமிழ் மாணவர்களின் தமிழ், மற்றும் கலை திறமைகளை கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். பல ஆசிரியர்களின் சலிப்பில்லாத விடா முயற்சி பல மாணவரகளின் தமிழை வளர்க்க மிகவும் உதவியாக இருக்கின்றது.

தமிழ் பாடசாலை தமிழ் மாணவர்களுக்கு தவிர்க்க முடியாதது, அத்தியாவசியமானது என்பதை பெற்றோர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

தமிழையும், கலாச்சாரத்தையும் கட்டியெழுப்பமுடியும் என்று பத்து வருடங்களாக நிரூபிக்க உதவிய எல்லா நல் உள்ளங்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பணிகள் மேன் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

அன்புடன்…
அற்புதராஜா

செயலாளர்

அஸ்கர் பாரும் தமிழர் ஒன்றியம்.

# மாணவனின் வாழ்த்து.

தாய் மொழி தமிழினை எனக்கு உணர்த்திய தமிழ் அறிவாலயமே!

உனக்கு வயது பத்து என்று பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு எனக்கு மிகவும் மகிழ்சியாகவே இருக்கிறது. உன்னிடம் பத்து ஆண்டுகள் தமிழ் படித்த மாணவன் நான் என்ற எண்ணம் தான் அந்த மகிழ்ச்சிக்கு காரணம்.

அது மட்டுமா! உன்னிடம் தமிழ் படிக்க வந்த முதல் மாணவர்களுள் நானும் ஒருவன் என்பது எனக்கு இப்பொழுது மிகுந்த பெருமையாக இருக்கிறது.

அறிவாலயமே! பத்தாவது ஆண்டுவிழா காணும் நீ என்னைப் போல இன்னும் பல நூறு மாணவர்களுக்கு தமிழ் அறிவை ஊட்டி கலைத்திறனையும் சேர்த்து வளர்க்க வேண்டும்.

உன் சேவை எந்த நாளும் நோர்வே நாட்டில் தொடரவேண்டும். இதுவே இந்த சிறிய மாணவனின் பெரிய ஆசை.

அஸ்கரோ பாரும் தமிழ் அறிவாலய மாணவன்

நோவா தயாளன்

